**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 78/2011**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 06.10.2025 | | |
|---|---|---|---|
| பெயர்: | குமார்<br>(PW– 1 Cross ) | தகப்பனார் பெயர்: | ராஜமாணிக்கம் |
| கிராமம்: | வைத்தீஸ்வரன்கோயில் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 48/2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 06.10.2025**

**(ஆரம்பித்த நேரம்–13.56)**

1. தாவா சொத்து எடக்குடி வடபாதி–1 வட்டத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்தின் பழைய புல எண் என்பது 399/24 ஆகும். அதன் விஸ்தீரணம் 620 சதுரடி. தாவா சொத்தின் கிழக்கில் உமாபதி வீடு, மேற்கில் சுசீலா பாலு வீடு, வடக்கில் ரோடு, தெற்கில் குட்டை உள்ளது. தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டைச் சார்ந்ததாகும். தாவா சொத்து எனக்கு எப்படி உரிமையானது என்றால் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டா மூலம் உரிமையானது.

2. தாவா சொத்தைப் பொறுத்து ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இருக்கிறது. யார் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்றால் ராஜமாணிக்கத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. ராஜமாணிக்கம், கோவிந்தராஜ் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார். அது எந்த வருடம் என்றால் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது தகப்பனார் பெயர் ராஜமாணிக்கம், ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயர் கோவிந்தராஜ் ஆகும். எனது அப்பாவின் அப்பாவிற்கு கோவிந்தராஜ் என்ற பெயரைத் தவிர வேறு எந்த பெயரும்

கிடையாது என்றால் சரிதான்.

3. எனது பிராதில் அப்பாவின் அப்பா பெயர் வரதராஜன் என்றிருந்தால் அது தவறு என்றால் அவருக்கு 2 பெயர்கள் உண்டு. எனது அப்பாவின் அப்பா பெயர் வரதராஜன் (எ) கோவிந்தராஜ் என்பதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்த கிரயப்பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. எனது தகப்பனாருக்கு 7 பேர்கள் வாரிசுதாரர்கள். யார் யார் வாரிசுகள் என்றால் ரவி, லட்சுமணன், குமார், கண்ணன், மாலதி, பாலமுருகன், வசந்தா ஆகியோர் வாரிசுகளாவர். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தில் மாலதியின் பெயர் இல்லை என்றால் அவருக்கு செட்டில்மெண்ட் செய்யப்பட்டு தனியாக அனுப்பிவிட்டோம். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாவில் கோவிந்தராஜ் மகன் ராஜமாணிக்கம் என்று பெயருள்ளது தவறு என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனது அப்பாவின் அப்பா பெயர் வரதராஜன் என்று முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் ராஜமாணிக்கத்தின் இனிஷியல் V என்று உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவின் அப்பா பெயர் கோவிந்தராஜ் என்பதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான பட்டா எனது தகப்பனார் பெயருக்கு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் மகன் ராஜமாணிக்கம் என்பது எனது தகப்பனார் கிடையாது என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.1 ஆவணம் எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள விஸ்தீரணம் மற்றும் அதற்கான வரைபடம் தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கினை யார் யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆரம்பத்தில் ரவி, லட்சுமணன், குமார், வசந்தா ஆகிய 4 பேரும் தாக்கல் செய்தோம். அப்போது ஏன் மற்ற நபர்களை வாதிகளாக

சேர்க்கவில்லை என்றால் மற்ற வாதிகளில் 3 பேர் வெளியூரில் இருந்த காரணத்தால் அப்போது சேர்க்கவில்லை. ராஜமாணிக்கத்தின் இறப்புச் சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 14.20)**